* 212 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Chief Minister be pleased to state the basis on which licences are issued by the Commissioner of Police for holding kalai vizhas in residential areas in Madras City?

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

சென்னை மாநகரில் மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் கலை விழாக்களை நடத்துவதற்கான உரிமங்கள் எந்த அடிப்படையில் காவல் துறைக் கமிஷனரால் வழங்கப்படுகின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சென்னை மாநகரில் கலைவிழாக்கள் நடத்த காவல்துறைக் கமிஷனர் உரிமங்கள் வழங்குகிறார். ஆனால், இந்தக் கலைவிழாக்களை நடத்துவோர், 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவலர் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட விதிகளில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அனுசரித்து நடக்க வேண்டும்.

Women Police Wing

* 213 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Chief Minister be pleased to state the present state of the proposal to appoint women police in our State?

மகளிர் காவல் பிரிவு.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

நம் மாநிலத்தில் பெண் காவலர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 1973-ம் ஆண்டிலேயே சென்னை மாநகர்க் காவற் பிரிவில், மகளிர் காவற் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மகளிர் காவல் பிரிவில் வேலைக்கு அமர்த்தப்படுவதற் காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சென்னை, கீழ்ப்பாக்கத்திலுள்ள காவல் பயிற்சிப்பள்ளியில் பயிற்சி பெறுகிறார்கள்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்தப் பயிற்சியில் எவ்வளவு பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள்; இதை மேலும் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா; இதில் பயிற்சி பெறுபவர்கள் எப்போது வேலைக்கு வருவார்களென்று அறிய விரும்புகிறேன்.